DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW1 | Caste | : | |
| Name | : | சத்யா | Age | : | 34 |
| W/o | : | சுசேந்திரன் | Occupation | : | செவிலியர் |
| Village | : | கமுகூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of March 2024.

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கமுகூரணியில் குடியிருந்து கொண்டு செவிலியராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 12.12.2022 ம் தேதி இரவு 09.30 மணியளவில் நானும், எனது அம்மா ராணி மற்றும் எனது தம்பி முகம்மது ஆசிப் ஆகியோரும் முல்லை நகரில் இருந்து எனது அத்தை வீட்டிற்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு எதிரே வந்த ஆட்டோ என் மீதும், எனது அம்மா மீதும் மோதி விபத்து ஏற்படுத்தியது. அதில் எனக்கு இடது தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. இடதுபுற தலைப்பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டது. எனது அம்மாவிற்கு பின் தலையிலும், கால்களிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டன. அதன் பிறகு என்னையும், எனது அம்மாவையும் எனது தம்பி ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார். மருத்துவமனையில் எனது அம்மா இறந்துவிட்டதாக மருத்துவர் சொன்னார். விபத்து ஏற்படுத்திய ஆட்டோவை ஓட்டிய நபர் கந்தசாமி என்று எனது தம்பி சொன்னார். நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருக்கும்போது கேணிக்கரை போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார். அதில் அறிவேன் சாட்சியாக எனது சித்தி மகன் ஜேசு எல்ஸ்டன் கையொப்பம் செய்தார். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW2 | Caste | : | |
| Name | : | முகம்மது ஆசிப் | Age | : | 29 |
| F/N | : | முகம்மது புகாரி | Occupation | : | மருத்துவர் |
| Village | : | ஏர்வாடி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of March 2024.

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் ஏர்வாடியில் குடியிருந்து கொண்டு மருத்துவராக பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் தான் விபத்து ஏற்படுத்திய ஆட்டோவை ஓட்டி வந்தார். கடந்த 12.12.2022ம் தேதி இரவு 09.30 மணியளவில் நான், எனது அக்காவான அ.சா.1 மற்றும் எனது அம்மா ஆகிய மூவரும் இராமநாதபுரம் to கமுகூரணி சாலையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு எதிரே அதிவேகமாக வந்த ஆட்டோ என் அக்கா மீதும், எனது அம்மா மீதும் மோதி விபத்து ஏற்படுத்தியது. வாகனம் மோதியதில் எனது அம்மா 10 அடி தள்ளி விழுந்தார். எனது அக்காவிற்கு இடது பக்க தலையிலும், தோள்பட்டையிலும், இடது கையிலும் காயங்கள் ஏற்பட்டன. எனது அம்மாவிற்கு கணுக்காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி ஆட்டோவை அங்கிருந்து விளக்கு போஸ்ட் மீது மோதிவிட்டார். நான் சென்று ஆஜர் எதிரியை கேட்டபோது நான் இந்த வழியாக தான் வருவேன் என்று சொல்லி என்னை தள்ளிவிட்டு ஆட்டோவை எடுத்து சென்றுவிட்டார். அதன் பிறகு எனது அம்மாவையும், எனது அக்காவையும் ஆம்புலன்ஸ் மூலம் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றேன். மருத்துவமனையில் எனது அம்மா இறந்துவிட்டதாக சொன்னார்கள். நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கேட்டு அ.சா.1 புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை** : இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW3 | Caste | : | |
| Name | : | ஜேசு எல்ஸ்டன் | Age | : | 29 |
| F/N | : | தாசன் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | தங்கச்சிமடம் | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07[th] day of March 2024.

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் தங்கச்சிமடத்தில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியாது. கடந்த 12.12.2022ம் தேதி இரவு 09.45 மணியளவில் நான் தங்கச்சிமடம் கடற்கரையில் இருந்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் இருந்து ஒரு செவிலியர் எனக்கு போன் செய்து அ.சா.1னிற்கும், எனது பெரியம்மாவான ராணி என்பவருக்கும் விபத்து ஏற்பட்டதாக தகவல் சொன்னார். நான் எங்களது உறவினர் அனைவருக்கு தகவல் சொன்னேன். அதன் பிறகு நான் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து பார்த்தபோது எனது பெரியம்மா ராணி இறந்து கிடந்தார். எனது அக்காவான அ.சா.1 க்கு தலையிலும், இடது பக்க தோள்பட்டையிலும் காயங்கள் இருந்தன. மறுநாள் காலை கேணிக்கரை போலீசார் அ.சா.1னிடம் புகார் வாக்குமூலம் பெற்றார்கள். அதில் நான் அறிவேன் சாட்சியாக கையெழுத்து செய்தேன். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். **(அந்த கையெழுத்து அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | கார்த்திக் | Age | : | 41 |
| F/N | : | காமாட்சி | Occupation | : | வியாபாரம் |
| Village | : | கழுகூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of March 2024.

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கழுகூரணியில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 13.12.2022ம் தேதி காலை 08.30 மணியளவில் நானும், கங்காகர்ணன் என்பவரும் கழுகூரணி பஸ் ஸ்டாப் அருகே நடைபயிற்சி மேற்கொண்டிருந்தபோது கேணிக்கரை போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், கங்காகர்ணன் என்பவரும் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். **(பார்வை மகஜர் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**

DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II,

RAMANATHAPURAM

**C.C.No.418/2023**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW5 | Caste | : | |
| Name | : | கங்காகர்ணன் | Age | : | 37 |
| F/N | : | நாகசுந்தரம் | Occupation | : | வியாபாரம் |
| Village | : | கழுகூரணி | | | |
| District | : | இராமநாதபுரம் | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 07th day of March 2024.

**07.03.2024**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது இராமநாதபுரம் மாவட்டம் கழுகூரணியில் குடியிருந்து கொண்டு வியாபாரம் செய்து வருகிறேன். கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் ஒரு நாள் காலை 08.30 மணியளவில் நானும், கார்த்திக் என்பவரும் கழுகூரணி முல்லை நகர் பஸ் ஸ்டாப் அருகே நடைபயிற்சி மேற்கொண்டிருந்தபோது கேணிக்கரை போலீசார் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நானும், கார்த்திக் என்பவரும் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

(குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

**மறு விசாரணை :** இல்லை

**(ஒப்பம்/-க.பிரபாகரன்)**

**நீதித்துறை நடுவர் எண்.2,**

**இராமநாதபுரம்.**